பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 01 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில், மூன்று அம்ரித் பாரத் ரயில்களையும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடங்கிவைக்கிறார்.
2. ஜம்மு காஷ்மீரில் ராணுவ வாகனம் விபத்துக்குள்ளானதில் 10 வீரர்கள் உயிரிழந்தனர்.
3. இந்திய — ஐரோப்பிய யூனியன் இடையிலான ஒத்துழைப்பு உலகளாவிய வர்த்தகத்திற்கு வலு சேர்க்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
4. சர்வதேச தரத்தில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு உலகப் பொருளாதார கூட்டமைப்புடன் இணைந்து இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நாளை புதிய திட்டங்களை தொடங்கிவைக்கிறார். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

ரயில் போக்குவரத்து, நகர்ப்புற மேம்பாடு, அறிவியல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள், உயர்தர மருத்துவ சேவை மற்றும் மக்கள் சார்ந்த சேவைத் திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

திருவனந்தபுரத்தில் நாகர்கோவில் — மங்களூரு, திருவனந்தபுரம் — தாம்பரம், திருவனந்தபுரம் — **Charlapalli** இடையேயான மூன்று அம்ரித் பாரத் ரயில்களையும், திருச்சூர் — குருவாயூர் இடையே புதிய பயணியர் ரயிலையும் அவர் தொடங்கிவைக்க உள்ளார்.

புதிய அம்ரித் பாரத் ரயில்கள், கேரளா, தமிழகம், கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை இணைக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ளன.

அம்ரித் பாரத் ரயில்களில் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும், குறித்த நேரத்திலும் பயணிகள் செல்வதற்கான வாய்ப்பை அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், நடைபாதை வியாபாரிகளுக்கு உதவும் வகையில் ஸ்வநிதி கிரெடிட் கார்டுகளையும் பிரதமர் வழங்க உள்ளார்.

**CSIR — NIIST** அமைப்புகள் கூட்டாக இணைந்து மேற்கொள்ளும் புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோருக்கான மையத்தையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

திருவனந்தபுரம் **Sri Saithra Trinal** மருத்துவக்கல்லூரியில் கதிரியக்க அறுவை சிகிச்சை மையத்தையும் அவர் தொடங்கவைக்க உள்ளார்.

அந்நகரின் **Poojapura**-வில் புதிய அஞ்சல் நிலையத்தையும் பிரதமர் தொடங்கிவைக்க உள்ளார்.

தமது திருவனந்தபுரம் பயணத்தை முடித்துக்கொண்டு நாளை பிற்பகல் தமிழகம் வருகிறார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் ராணுவ வாகனம் விபத்துக்குள்ளானதில், **10** வீரர்கள் உயிரிழந்தனர். **11** பேர் காயமடைந்தனர்.

தோடா மாவட்டத்தில் **Bhaderwah** — சம்பா மலைப்பாதையில் இந்த ராணுவ வாகனம் சென்றுகொண்டிருந்தபோது, சாலையையொட்டிய ஆழமான பள்ளத்தில் வாகனம் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இந்த விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்த வீரர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சமூக வலைதள பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கப்படும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வும், தோடா விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா ஆகியோரும் உயிரிழந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான ஒத்துழைப்பின் மூலம், உலகளாவிய வர்த்தகத்திற்கு வலு சேர்க்க முடியும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற டாக்டர் ஜெய்சங்கர், வர்த்தகம், சரக்கு போக்குவரத்து, பாதுகாப்பு

ஒத்துழைப்பு ஆகியவற்றில் உள்ள இருதரப்பு ஒத்துழைப்பு, உலகப் பொருளாதாரத்தை சீர் செய்யும் என்றும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தேர்தல் ஆணையத்தின் ஒருங்கிணைந்த தகவல் சேவை தளமான **ECINET**-ஐ தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சாந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும், தேர்தல் நிர்வாகம் மற்றும் ஜனநாயகம் குறித்த சர்வதேச மாநாட்டில், **40** செயலிகள் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த தகவல் தளத்தை தொடங்கிவைத்து பேசிய திரு கியானேஷ்குமார், நாட்டு மக்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், தேர்தல் அலுவலர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் தளமாக இது அமைந்துள்ளது என்று கூறினார்.

தேர்தல் தொடர்பான அனைத்து முக்கிய சேவைகளையும் இந்த தகவல் தளத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆங்கிலம் மற்றும் **22** மாநில மொழிகளில் பயன்படுத்துதற்கு ஏதுவாக **ECINET** தகவல் தளம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி முறைகேடு தொடர்பான வழக்கில், அமலாக்கப் பிரிவினர் இன்று மேற்குவங்கம், மணிப்பூர், ஜார்கண்ட் மாநிலங்களில் பத்து இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

இதுதொடர்பாக, மத்திய சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பு அளித்த புகாரின் அடிப்படையில் 100 கோடி ரூபாய் அளவிற்கு மோசடி செய்ததாக அமலாக்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் சித்தி விநாயக் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவருடைய நிறுவனம் 15 ஆயிரத்து 258 போலி ரசீதுகள் தயாரித்து ஆறு மாதங்களில் 658 கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி செய்ததாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

நாட்டில் உள்ள இளைஞர்களின் திறனையும், தொழில்நுட்ப அறிவையும் மேம்படுத்தும் நோக்கில், உலக பொருளாதார கூட்டமைப்புடன் மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகம் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இளைஞர்களின் தொழில் திறனை விரைவாக மேம்படுத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

உலக அளவில் வேலைவாய்ப்புகளை பெறும் வகையில், இளைஞர்கள் தங்களது திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நும்பம் பசுமை எரிசக்தி, ரோபோட்டிக்ஸ், நவீன தயாரிப்புத் தொழில் ஆகியவற்றில் இளைஞர்களுக்கு உலகப் பொருளாதார கூட்டமைப்புடன் இணைந்து, பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது ஒருங்கிணைந்த தனியார் செயற்கைக்கோள் தயாரிப்பு தொழிற்சாலைக்கு குஜராத் மாநிலம் **Sanand** மாவட்டத்தில் இன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

நாட்டின் விண்வெளி தொழில்நுட்பத்துறைக்கு வலுசேர்க்கும் வகையில், இந்த தொழிற்சாலை அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் **Modhwadia** முன்னிலையில் இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

அப்போது பேசிய அமைச்சர், விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா சுயசார்பு நிலையை எட்டும் வகையில் இந்த தொழிற்சாலை அமையும் என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் நாடு முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி தங்களுக்கு இயற்கை உரங்கள் தயாரிக்கவும், சாகுபடி செலவுக்கும் பெரிதும் பயன் அளிப்பதாக உள்ளது என்று தமிழகத்தின் வேலூர் மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

***(Sound Byte — விவசாயிகள் - 43 Sec.)***

<<<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநில காவல்துறையினர் இன்று மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையின்போது, **15** நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

மேற்கு **Singhbhum** மாவட்டத்தில் உள்ள **Saranda** வனப்பகுதியில் காவல்துறையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தபோது, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

காவல்துறையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில், **15** நக்சலைட்டுகளும் கொல்லப்பட்டதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு அமித் ரேணு தெரிவித்தார்.

அவர்களிடமிருந்து ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகவும், வனப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள **Bolodabazar** பகுதியில் எஃகு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் குறித்து விசாரிக்க மாவட்ட நிர்வாகம், துணை மண்டல நீதிபதி தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற உத்தரப்பிரதேச அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------------

ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்ட்ரியாவின் நீல் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 3-6, 7-6 என்ற செட் கணக்கில், பிரான்சின் Pierre Herbert — ஆஸ்திரேலியாவின் Jordan இணையை வென்றது.

------------

புவனேஷ்வரில் நடைபெற்று வரும் ஒடிசா அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் தமிழக அணி முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 7 விக்கெட் இழப்பிற்கு 281 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<END>>>>>